[7th November 1966

திரு. மா. தண்டாயுதபாணி: இந்த ஏ.டி.டி. 27 நெல் கடந்த ஆண்டு 5,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டது. அதைப் பயிர் செய்யும்போது சாதாரண நெல்லுக்குக் கொடுக்கக் கூடிய உரத்தை விட அதிகமாகக் கொடுத்தால்தான் நல்ல முறையில் விளையக்கூடிய தாக இருக்கிறது. இந்த ஆண்டு 3 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்திருக்கிருர்கள். குறிப்பிட்ட அளவுக்கு உரம் கொடுத்தால் தான் ஹை ஈல்டு புரோகிராம்படி விளைச்சல் கிடைக்கும். இந்த மூன்று லட்சம் ஏக்கராவில் பயிர் செய்வதற்கான அளவு சூப்பர் பாஸ்பேட் உரம் கிடைக்கவே இல்லை. ஆகவே, உரத்தை அதிக மாகக் கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறது?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏ.டி.டி. 27 விளைவிக்கக் கூடிய பகுதிகளுக்கு அதிகமாக உரம் கொடுக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கத்தில் இருந்து தனியாகக் கேட்டுப் பெற்று எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு உரம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

திரு. கோ. சி. மணி: சென்ற பசலியில் குறுவை சாகுபடி யானதை விட அதிகமாக மூன்றில் இரண்டு பங்கு நிலத்தில் இப்போது ஏ.டி.டி. 27 விதையை அந்த நிலங்களிலும் பயிரிடும் போது அதற்குத் தக்க விகிதத்தில் உரத்தை அதிகரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் இல்லையென்றாலும் பொதுவாகக் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி: ஏ.டி.டி. 27-க்கு அதிகமாக உரம் கொடுத்தால் அதிகமாக விளையும் என்று சொன்னார்கள். நம்முடைய நாட்டு நெல்லுக்கும் அதிகமாக உரம் கொடுத்தால் அதிகமாக விளையுமா என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்தார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஏ.டி.டி. 27-ஐப் பொருத்தவரை அதிகமாக உரம் போட்டால் அதிகமாக விளைச்சல் கொடுக்கும்.

Cocoanut Package Units

* 477. Q.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any scheme is envisaged for establishing new cocoanut plantations in Madras State; and

(b) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) ஆம்.

(இ) சபைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட் டுள்ளது.

---

* 572–574-ம பக்கங்களில் வட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

7th November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : தென்னை வளர்ப்புக்கும் கொடுக்கக்கூடிய சலுகையைப் போலவே பனை மர வளர்ச்சிக்கும் ஊக்கம் அளிக்கத் திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இல்லை. பனை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தான் என்னைப் பொருத்தமட்டில் நினைக்கிறேன். ஏற்கனவே இருக்கின்ற பனையைத் தவிர புதிதாகப் பனையைக் காணவில்லை. ஆகவே, தென்னை வளர்ப்பை அதிகப்படுத்த திட்டம் தீட்டியிருப்பது போல் பனை வளர்ப்புக்கும் திட்டம் தீட்டுவது நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. கோ. சி. மணி : தேவஸ்தான இடங்களை விவசாயிகள் ஏலத்திற்கு எடுத்தோ அல்லது குத்தகை மூலம் எடுத்தோ தென்னை வளர்ப்பில் ஈடுபடும்போது கொடுக்கப்படுகிற உதவித் தொகை அந்த விவசாயிகளுக்குச் சேரும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கொடுக்கப்படும் கடன் நிலச்சுவான்தாருக்குப் போகிறதா அல்லது விவசாயிக்குப் போகிறதா என்ற தகவல் இல்லை. ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் கொடுக்க வேண்டுமென்பது திட்டம்.

திரு. சா. கணேசன் : பனை வளர்ப்புக்கு ஆக்கம் கொடுக்க வேண்டும் என்பது தங்களுடைய கருத்து என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, சிறப்பாக பனை விளையக் கூடிய பகுதிகளிலே உள்ள அதிகாரிகளுக்கு ஆங்காங்குள்ள வயல்கள் அல்லது தோட்டக்காடுகள் போன்றவற்றில் அவற்றின் வேலிகள் முழுவதிலும் தொடர்ந்து பனை வேலியாக வைப்பதற்கு ஆக்கமும் அதற்கு உணர்ச்சியும் ஊட்டக்கூடிய நிலையில் அறிக்கை கொடுத்து அவர்கள் மூலமாக அதை வளர்க்கச் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். a.m.

கனம் திரு. பூ. கக்கன் : புன்செய் நிலங்களில் வேலி ஓரங்களில் பனம்கொட்டைகளைப் போட்டு நல்லமுறையில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யலாம். வரப்பு அகலமாக இருந்தால் வைக்கலாம். பக்கத்தில் இருந்தால் உழுவதற்கு கஷ்டமாக இருக்கும். பார்த்து, அகலமாக இருந்தால், புன்செய் நிலங்களின் வேலி ஓரங்களில் வைப்பது நல்லது. தோட்டங்களாகவும் ஏற்படுத்துவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கொலை வழக்குகள்

* 473 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில், 1964-ம் ஆண்டு ஜனவரி முதல் இன்று வரை பதிவு செய்யப்பட்ட கொலை வழக்குகள் எத்தனை, தாலுகாவாரியாக ?